(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 22 PTM 104

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் – 2022

எம்.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 50

முதல் பருவம் நேரம் : 3 மணி

## இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள்

### பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (K1)**

1. புதுத்திறனாய்வுக் கோட்பாடு எந்த நாட்டில் தோன்றியது?
   அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து இ) ஜெர்மனி ஈ) இரஷ்யா
2. ‘‘சமுதாயத்தைச் சொல்லில் வடித்தளிப்பதே இலக்கியம்’’ என்பது யார் கூற்று?
   அ) எம்.டபிள்யூ. பாற்றீசன் ஆ) விக்டர் எர்லிச் இ) ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் ஈ) டி போனால்ட்
3. Deconstruction - என்பதற்குச் சிதைவாக்கத் திறனாய்வு என்ற கலைச்சொல்லை வழங்கியவர் யார்?
   அ) ப.மருதநாயகம் ஆ) தி.சு.நடராசன் இ) எச்.பாலசுப்பிரமணியம் ஈ) அ.அ. மணவாளன்
4. பண்ணை (அல்லது) குடியிருப்பு என்னும் பொருள் தருவது எது?
   அ) ஏகாதிபத்தியம் ஆ) காலனித்துவம் இ) நவகாலனித்தவம் ஈ) பின் காலனித்துவம்
5. “ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை, பெண்ணாக ஆக்கப்படுகிறார்’’ என்ற சிமோன் தெ பௌவாரின் கூற்றை சாரம்சமாகக் கொண்ட பெண்ணியம் எது?
   அ) மிதவாதப் பெண்ணியம் ஆ) மார்க்சியப் பெண்ணியம்
   இ) பண்பாட்டுப் பெண்ணியம் ஈ) தீவிரவாதப் பெண்ணியம்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக. (K2)**

6. ‘இலக்கிய வரலாற்றெழுதியல்’ என்தற்கான பொருள் யாது?
7. ‘பிரதிபலிப்புக் கொள்கை’ சிறப்பிடம் பெறுகிற திறனாய்வைக் குறிப்பிடுக.
8. அமைப்பியல் என்பதற்கு லெவிஸ்ட்ரஸ் எனும் அறிஞர் தரும் வரையறை யாது?
9. பின்காலனித்துவத் திறனாய்வின் முன்னோடி நூல் எது?
10. புலப்பெயர்வுக்கான காரணங்களை முனைவர் க. பஞ்சாங்கம் எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?

### பகுதி – ஆ (5x 3=15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) வில்லியம் எம்சன் குறிப்பிடும் ஏழு வகை பொருள் மயக்கங்களைக் கண்டுரைக்க.

(அல்லது)

ஆ) மொழியியல் திறனாய்வாளர்கள் கூறும் புதைவடிவம் - புறவடிவம் இரண்டுக்குமான வேற்றுமைகள் யாவை?

12. அ) மார்க்சியத் திறனாய்வில் இயங்கியல் பொருள்முதல் வாதத்தின் பங்களிப்பை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) இலக்கியத்தில் தொன்மத்தின் பயன்பாட்டைத் தெளிவுபடுத்துக.

13. அ) அமைப்பியல் என்பதற்கு அறிஞர்கள் தரும் வரையறைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) எடுத்துரைப்பியல் திறனாய்வு என்றால் என்ன? எடுத்துரைப்பின் பல்வேறு படிநிலைகளை வரிசைப்படுத்துக.

14. அ) பின்காலனித்துவம் தோன்றிய சூழலைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) காலனித்துவத்தில் தந்தைவழிச் சமூக அமைப்பின் தாக்கத்தைக் குறிப்பிடுக.

15. அ) இயற்கைக்கும் மனிதர்களுக்குமான உறவை எந்தெந்த தளங்களில் பேராசிரியர் நிர்மல் செல்வமணி பிரித்துள்ளார்?

(அல்லது)

ஆ) சூழலியல் திறனாய்வின் அணுகுமுறைகளைச் சுட்டுக.

**பகுதி – இ (5x 5=25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K4/K5)**

16. அ) ஒப்பிலக்கிய அறிஞர்கள் குறிப்பிடும் போலச் செய்தலின் வகைகளை விரித்துரைக்க.

(அல்லது)

ஆ) புதுத்திறனாய்வுக் கோட்பாட்டின் வகைகளை விளக்கி எழுதுக.

17. அ) சமூகவியல் திறனாய்வு குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) உளவியல் அணுகுமுறையும் மனப் பகுப்புகளும் குறித்து தொகுத்தெழுதுக.

18. அ) அமைப்பியலுக்கும் பின் - அமைப்பியலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) பின் நவீனத்துவக் கூறுகளை லியோதார்த் என்பார் எங்ஙனம் வகைப்படுத்தியுள்ளார் என்பதை விவரிக்க.

19. அ) பின்காலனித்துவத்தில் தன்வரலாற்று எழுத்தினூடாக சுயத்தை நிலைநாட்டல் குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) பின்காலனித்துவ எழுத்தில் உள்ள பிரதியியல் சார்ந்த போர்த்தந்திரங்களை விவரிக்க.

20. அ) பெண்ணியத்தின் வகைகளை விளக்கி வரைக.

(அல்லது)

ஆ) புலம்பெயர் வாழ்விற்கான காரணங்களையும் புலம்பெயர் சமூகத்தின் பொதுவான பண்புகளையும் ஆராய்க.

*****